**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**STC.No. 3005/2025**
**U/s. 294(b),354,324,506(1) IPC**
**PROSECUTION WITNESS NO. 1 (LW. 1)**

| | |
|---|---|
| **Name** : சபீலா பேகம். | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address :** | **Age : /2026** |

**1,2,3** எதிரிகள் ஆஜர்.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திரு. பரத் , பெஞ்ச் கிளாக் , செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**STC.No.3005/2025 15.05.2026 விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 12.00 Pm**

**முதல் விசாரணை:**

நான் தற்போது தஞ்சாவூர் கீழவாசலில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனக்கு வழக்கு சம்மந்தமாக மறந்துவிட்டது. தற்போது எதிரிகளுடன் சமாதானமாக செல்கிறேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது. சாட்சியை மேற்கு காவல் நிலைய தலைமை காவலர் 2376 திருமதி. மோகனசுந்தரி அவர்கள், நீதிமன்றத்தில் அடையாளம் காண்பித்தார்.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 04.06.2023 ம் தேதி எனது தாய் வீட்டிலிருந்து வந்திருந்தேன். அப்போது சுமார் 5.40 மணியளவில் பக்கத்தில் உள்ள தர்கா அருகில் உள்ள காலியான மைதானத்தில் எனது மகன் சாதிக் நிஜா அவரது நண்பன் சச்சின் ஆகியோரை திவான் நகர் கோர்ட் ரோட்டை சேர்ந்த அப்பாஸ் கனி, சதாம், அசார் , சுகைல் ஆகியோர் அடித்து விட்டதாக தகவல் வந்தது, நான் உடனடியாக காலி மைதானத்திற்கு சென்று கேட்டபோது ஆஜர் எதிரிகளான அப்பாஸ் கனி, சதாமும், அசாரும், என்னை தேவுடியா, குச்சிகாரி மகனே என்ன உனக்கு சிபாரிசு என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டி அப்பாஸ்கனி என கையை பிடித்து இலுத்து கீழே தள்ளி விட்டு காலால் எனது நெஞ்சில் மிதித்ததாகவும், சுகைல் தன் கையில் வைத்திருந்த பேட்டால் சச்சின் என்ற லெட்சுமணனை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறி அடித்தாகவும், மேலும் அப்பாஸ் கனி என்னை காலால் மிதித்ததால் நெஞ்சில் கடுமையான நெஞ்சு வலி ஏற்பட்டதாகவும், சச்சினுக்கு தலையிலிருந்து அதிகம் இரத்தம் வந்தததால் ஆட்டோவில் TMCH ற்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தாகவும், போலீசார்

விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிக்கு பயந்து எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**1–3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம் - கனிமொழி**.,L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.